# அர்த்தங்களின் அதிகாரத்தைத் தகர்த்த ரோலண் பார்த்தின் 'படைப்பாளனின் மரணம்' எனும் கருத்தமைவு – ஒரு விமர்சனப் பகுப்பாய்வு

**K.L. Fathima Nafla**
South Eastern University of Sri Lanka
naflikl1992@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

பின் நவீனத்துவ சிந்தனையாளர் என அறியப்படும் ரோலன் பார்த் தனது "ஆசிரியனின் மரணம்" எனும் கருத்தமைவை அறிவித்ததன் மூலம் அதுவரை காலம் வேரூன்றியிருந்த கருத்தியல்களையும் அர்த்தப்படுத்தல்களையும் கேள்விக்குட்படுத்தினார். ஆசிரியன் மரணித்து விட்டான் என்பதன் மூலம் கருத்தியல் ரீதியில் பிரதிமேல் அவன் கொண்டிருந்த அதிகாரம் அல்லது உரிமை மறுக்கப்படுகிறது. ஏனெனில் ஒரு பிரதியை எழுதும் போது பெறப்படும் அர்த்தம் அதனை வாசிக்கும் போது பெறப்படும் அர்த்தத்திலிருந்து மாறுபட்டது. எனவே அங்கு "எழுத்தின் மூலம்" அழிக்கப்பட்டு ஆசிரியனின் மரணம் நிகழ்கிறது. இதன் மூலம் வாசகன் பிரதிக்கான அர்த்தப்படுத்தல்களை உருவாக்குகிறான். இதிலிருந்து பிரதி மீது ஆசிரியன் கொண்டிருந்த ஒற்றை அதிகாரம் தகர்க்கப்படுகிறது. எனவே ஒரு பிரதியின் உள்ளடக்க விடயம் வாசிப்பவனாலேயே உயிர்ப்புமிக்கதாக மாறுகின்றது என்கிறார் பார்த். இது ஆசிரியனை முன்னிலைப்படுத்தும் அதிகாரத்திற்கு எதிரானது. ஒரு பிரதி உருவாக்கும் மாறுபட்ட அர்த்தப்படுத்தல்கள் "நிலையற்ற அர்த்தங்கள்" என்பதன் மூலம் ஆசிரியனையும் வாசகனையும் மீறி செயற்பட்டுக்கொண்டிருக்கும். ஆனால் அர்த்தங்களை உருவாக்குபவன் வாசகனே என்ற அடிப்படையில் இது அமையுமெனில் வாசகனை மையப்படுத்தும் செயன்முறையாகிறது. இதனால் மாறுபட்ட அர்த்தப்படுத்தல்களுக்கான வழிமுறைகள் புறமொதுக்கப்படுவதாக பொருள் கொள்ளலாம். மேலும் நிலையற்ற அர்த்தங்களை தோற்றுவிக்கும் பிரதிவாசகனின் அர்த்தப்படுத்தல்களில் இறுதியடைய முடியாது என்பது பற்றியும் பல்வகைப்பட்ட புரிதல் மட்டங்களைக் கொண்டவாசகன் தோற்றுவிக்கும் அர்த்தம் ஏற்படுத்துகின்ற கருத்தியல் முரண்கள் தொடர்பாகவும் விமர்சனரீதியில் பகுப்பாய்வை மேற்கொள்வதுடன் பிரதியின் மரபாரந்த ஒழுங்கு,அர்த்தம் என்பவற்றுக்கு மாற்றான புதியசிந்தனை, புறவயமான விலகிய பார்வையினைக் கொண்ட நிலையற்ற அர்த்தங்களை சாத்தியமாக்குதல் என்பன தொடர்பில் கவனம் செலுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

***பிரதான சொற்பதங்கள்***: *படைப்பாளனின் மரணம், பிரதி, நிலையற்ற அர்த்தங்கள், கருத்ததிகாரம், குறியியல்.*

## அறிமுகம்

தெரிதாவின் கட்டுடைத்தல் (Deconstruction) பூக்கோவின் உரையாடல் (Discourse) போன்ற கருத்தமைவுகளைத் தொடர்ந்து ரோலன் பார்த்தின் 'ஆசிரியன் மரணித்துவிட்டான்' (Death of The author) எனும் கருத்தமைவானது பின் நவீனத்துப்பரப்பில் மிகப்பெரிய அளவில் கவனத்தைப் பெற்றது. குறியியலை மொழி சார்ந்து இயங்கும் அமைப்பிலான அர்த்தத்தைப் பற்றி பேசிய பார்த் அதன் நீட்சியாக மொழி என்பது தனிப்பட்ட நிகழ்வல்ல, அது எழுதுபவன் x வாசிப்பவன் என்ற இரட்டை எதிர்நிலை கொண்டது என்றார். எழுதுபவனின் வார்த்தைகளை வாசிப்பவன் அப்படியேதான் புரிந்து கொள்ள வேண்டும் என்றில்லை. இதில் ஆசிரியரின் மரணம் என்பதன் மூலம் பேசுவது ஆசிரியன் அல்ல. மொழியே என பார்த் அறிவிக்கிறார்.

இதன்போது பெற்றுக்கொள்ளப்படும் அர்த்தப்படுத்தல்கள் ஒற்றைத் தன்மை கொண்டதாக அமைய முடியாது. இது ஆசிரிய அடையாளத்தின் பக்கச்சார்புடைய உளச்சார்பு வாசிப்பினை விமர்சிக்கிறது. பிரதியினூடாக ஆசிரியனின் கருத்தையே வாசகன் கண்டு பிடிக்க வேண்டும் என்ற கட்டாயம் மறுக்கப்படுகிறது. இதில் ஆசிரியனின் மரணம் உருவகமேயன்றி உண்மையில்லை. இதனூடாக கருத்தியல் ரீதியான அதிகாரமே தகர்க்கப்படுகிறது என்பதை புரிந்து கொள்ளலாம். ஒரு பிரதி அர்த்தம் கொள்ளக்கூடிய அர்த்தப்படுத்தல் வழிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதனூடாக தோன்றும் நிலையற்ற அர்த்தங்கள் என்பவை பிரதியினை அர்த்தம் கொள்வது தொடர்பில் ஒரு நிலையான முடிவை அறிவிப்பதில்லை. எனவே ஒரு பிரதி வாசகனையும் மீறி இயங்கிக் கொண்டிருக்கும் என்பதுடன் இதுவே நிலையற்ற அர்த்தங்களை சாத்தியமாக்கும் என்பதை இவ்வாய்வு விளக்குகிறது.

மேலும் குறியியல் பற்றி விளக்கமளித்த பார்த் குறியியலை மொழியுடன் மட்டும் பொருத்திப்பார்ப்பதை விமர்சிக்கிறார். ஒரு குறியியலாளனின் பணி வெறுமனே மொழியுடன் முடிந்து போவதல்ல எனும் அடிப்படையில் குறிகளான மொழியின் அர்த்தம் பற்றிய கருத்திலிருந்து ஒரு ஆசிரியன் தன் எண்ணத்தில் தோன்றும் அனைத்தையும் இறக்கி வைக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டு அதன் நீட்சியாக "ஆசிரியனின் மரணம்" என்பதன் அர்த்த நியாயங்களை பார்த்தின் கருத்தமைவில் நின்று இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

**ஆய்வுப் பிரச்சினைகள்**

- ஆசிரியனின் மரணம் என்பதன் மூலம் பார்த் வலியுறுத்தும் வாசகனின் பிறப்பானது வாசகன் பெற்றுக்கொள்ளும் அர்த்தத்துடன் இறுதியான முடிவைப் பெற்றுக்கொள்ளும் எனில் "நிலையற்ற அர்த்தங்கள்" உருவாக்கப்படுமா? இதன் மூலம் அர்த்தங்களின் அதிகாரத்தை தகர்க்கும் வழிமுறை சாத்தியமாகுமா?

- பல்வேறு அறிதல் மட்டங்களைக் கொண்ட வாசகன் உருவாக்கும் அர்த்தப்படுத்தல்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் போது உண்டாகும் கருத்தியல் முரண்களை இக்கருத்தமைவு எவ்வாறு எதிர்கொள்ளும்?

**ஆய்வு நோக்கங்கள்**

- ரோலன் பார்த்தின் ஆசிரியன் மரணித்து விட்டான் எனும் கருத்தமைவை பகுப்பாய்வு ரீதியில் ஆய்வு செய்து விளங்கிக் கொள்ளல்.

- ஒரு பிரதி அர்த்தம் கொள்ளக்கூடிய அர்த்தப்படுத்தல் வழிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதனூடாக தோன்றும் நிலையற்ற அர்த்தங்கள் என்பவை பிரதியினை அர்த்தம் கொள்வது தொடர்பில் ஒரு நிலையான முடிவை அறிவிப்பதில்லை. எனவே ஒரு பிரதி வாசகனையும் மீறி இயங்கிக் கொண்டிருக்கும் என்பதுடன் இதுவே நிலையற்ற அர்த்தங்களை சாத்தியமாக்கும் என்பதை பகுப்பாய்வு ரீதியில் விளக்குதல்.
- நிலையற்ற அர்த்தங்களை தோற்றுவிக்கும் பிரதி வாசகனின் அர்த்தப்படுத்தல்களில் இறுதியடைய முடியாது என்பது பற்றியும் பல்வகைப்பட்ட புரிதல் மட்டங்களைக் கொண்ட வாசகன் தோற்றுவிக்கும் அர்த்தம் ஏற்படுத்துகின்ற கருத்தியல் முரண்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தல்.

**ஆய்வுமுறை**

இவ்வாய்வு இரண்டாம் நிலைத்தரவுகளை பிரதானமாகக் கொண்ட பண்புசார் ஆய்வாகும். ஆய்வுக்கான தரவுகள் நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தளக் குறிப்புக்கள், இணையசஞ்சிகைகள் என்பனவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வாய்வில் விபரிப்புடன் கூடிய பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**

‘ஆசிரியன் இறந்துவிட்டான்’ எனும் ரோலன் பார்த்தின் கருத்தமைவானது விபரிப்புடன் கூடிய ஒரு விமர்சனப் பகுப்பாய்வாக எடுத்தாளப்படுகிறது.
இதன் போது பின்வரும் விடயங்கள் விமர்சனப்பகுப்பாய்வு ரீதியில் விபரிக்கப்படுமாற்றை அவதானிக்கலாம்.

- ஆசிரியன் இறந்து விட்டான் என்பதன் மூலம் பிரதியானது ஓர் அதிகாரத் தன்மையிலமைந்த அர்த்தத்தை வெளிப்படுத்தும் சொற்களின் வரிசையில்லை என்பது புலனாகிறது. இதன் மூலம் அதுவரை காலம் நம்பப்பட்டு வந்த வாசகன் மீது அறிவையும், அர்த்தங்களையும் கொட்டிக்கவிழ்க்கும் ஆசிரியனின் அதிகாரம் தகர்க்கப்பட்டு பிரதி மீதிருந்த அர்த்தம் கற்பிக்கும உரிமை மறுக்கப்படுகிறது. இதன்போது ஒரு படைப்பாளன் கருத்தியல் ரீதியில் தன் சொந்த மரணத்தை எதிர்கொள்கிறான்.

- எழுத்து குறிகளால் ஆனது. அது சொற்கள் வெளிப்படுத்தும் ஒற்றை அர்த்தம் என்பதை சிதறடிக்கிறது. ஆனால் படைப்பாளன் என்ற ரீதியில் ஆசிரியனை முதன்படுத்துவதானது சிந்தனையைத் தூண்டுவதில்லை. அது ஆசிரியன் கூறும் ஒற்றை அர்த்தத்தை ஏற்கச்செய்கிறது. இதுவே அர்த்தங்கள் மீதான அதிகாரமாகும். இதைத்தான் ஆசிரியனின் மரணம் என்பதன் மூலம் பார்த் தகர்த்தார்.

- ஒரு பிரதியின் அர்த்தத்தை கண்டடையும் பொறுப்பை முற்றுமுழுதாக வாசகனுக்கு வழங்குவதானது அர்த்தப்படுத்தல்களை சாத்தியமாக்குகின்ற ஏனைய வழிமுறைகளை புறமொதுக்கும் செயற்பாடாக அமையலாம். மேலும் பிரதியை அர்த்தப்படுத்தும் புதிய வழிமுறையொன்று தோன்றுவதற்கான தடையை ஏற்படுத்தலாம். இது வாசகனின் அர்த்தப்படுத்தலை முடிவாகக் கொள்வதுடன் நிலையற்ற அர்த்தங்கள் தோன்ற வழிவகுப்பதில்லை.

- ஒரு பிரதி கொண்டிருக்கும் மரபார்ந்த அர்த்தம், ஒழுங்கு என்பதற்கு மாற்றமான புதிய அர்த்தப்படுத்தல்கள் உருவாக வேண்டும். இப்புதிய அர்த்தப்படுத்தல்கள் ஆசிரியனையும் வாசகனையும் மீறி பிரதியை இயங்கச் செய்து கொண்டிருக்கும். எனவே பிரதியானது முடிவு பெறும் அர்த்தப்படுத்தல்களில் தங்கியிராமல் நிலையற்ற அர்த்தங்களுக்கான சாத்தியங்களுடன் காணப்படும்.

- ஒரு பிரதியில் வாசகன் கண்டடைவதே அர்த்தம் என்பது விமர்சனத்துக்குரியது. ஏனெனில் வாசகன் என்பவன் பலவகையான அறிதல் அளவைக் கொண்டிருக்க வாய்ப்புண்டு. எனவே அவனது அனைத்து அர்த்தப்படுத்தல்களையும் ஏற்பது கருத்தியல் ரீதியில் முரணானது.

**முடிவுரை**

மொழி என்பது தனிப்பட்ட நிகழ்வல்ல. அது இருவர் சம்பந்தப்பட்டது. பேசுபவன் x கேட்பவன் , எழுதுபவன் **x** வாசிப்பவன் என்ற இரட்டை எதிர் நிலை கொண்டது. இதில் உள்ள சிக்கல் என்னவென்றால் பேசுபவன் சொல்லும் வார்த்தைகளை கேட்பவன் எப்படிப் புரிந்து கொள்கிறான் என்பதே. அப்புரிந்து கொள்ளலில் இருந்தே அர்த்தம் உருவாகிறது. மேலும் வாசிப்பவனின் சுதந்திரமான செயற்பாடு கருத்ததிகாரத்தை தகர்த்து ஆசிரியனை மரணிக்கச் செய்கிறது எனலாம்.
எழுதுபவனை பிரதியாளன் (Scripter) என்று அழைக்கிறார் பார்த். ஒரு பிரதியாளன் பிரதியை எழுதும் போது தானும் பிறக்கிறான். பிரதியாளனாகிய ஆசிரியன் தனது பிரதியை உருவாக்குவதற்காக கடுமையாக உழைக்கிறான். அவன் பிரதியை எழுதி முடித்ததும் இறக்கிறான். பிரதி பிறக்கிறது. இதில் ஆசிரியரின் மரணம் என்பது ஒரு உருவகமே தவிர உண்மை அல்ல.

இதன் மூலம் நிகழும் வாசகனின் பிறப்பு பிரதியை அர்த்தப்படுத்துவதனூடாக பிரதியை உயிர்ப்புடையதாக்கிறது எனப்படுகிறது. ஆனால் பிரதி மாறுபட்ட அர்த்தங்களை நோக்கி பயணிக்கத்தக்கது. அது வாசகன் பெற்றுக் கொள்ளும் அர்த்தத்தோடு இறுதியடைவதில்லை. அர்த்தப்படுத்தலுக்கான அனைத்து வழிமுறை நோக்கியும் பிரதி கவனம் செலுத்தப்பட வேண்டியதாகிறது. அது அர்த்தத்தை உருவாக்கும் புதிய வழிமுறைக்காகவும் தன் தயார்படுத்தலை மேற்கொள்ளும். ஏனெனில் பின் நவீனத்தின் மீது ஒரு குறிப்பான உள்ளடக்கத்தை சுமத்த முடியாது. அது கோட்பாடுகளை உருவாக்குவதில்லை.
மேலும் ஆசிரியனின் மரணம் என்பதனூடாக பிரதியின் அர்த்தத்தை உற்பத்தி செய்யும் முகவராக செயற்படும் ஆசிரியரின் அதிகாரத்தை இல்லாமலாக்கி வாசகனின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு வழிவகுப்பதே பார்த்தின் அணுகுமுறையாகும். இதையே அவர் பிரதியை எழுதி முடித்ததும் ஆசிரியன் மரணித்து அவன் பிரதி மீது வாசகனாகவும், விமர்சகனாகவும் செயற்பட வேண்டும் என்றார். ஒட்டு மொத்தமாக இக்கருத்தின் நிலைநாட்டல் தொடர்பில் பார்த் ஓரளவு வெற்றியடைந்தார் எனக்கூறலாம்.

**உசாத்துணைகள்**

1. சுரேஷ்.எம்.ஜி,(2007),பின் நவீனத்துவ சிந்தனையாளர் வரிசை: பார்த், ‘அடையாளம் பதிப்பகம்’ சென்னை. இந்தியா.

2. சுரேஷ்.எம்.ஜி, (2009), பின் நவீனத்துவம் என்றால் என்ன?, அடையாளம். புத்தானந்தம், தமிழ் நாடு, இந்தியா.
3. அழகரசன்,(2008), பின் அமைப்பியல்: மிகச் சுருக்கமான அறிமுகம், அடையாளம். புத்தானந்தம், இந்தியா.
4. இரவீந்திரன்.ந, (1997), பின் நவீனத்துவமும் அழகியலும், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், வவுனியா.
5. ஜெயராசா, சபா, (2006), பின் நவீனத்துவத்தை விளங்கிக்கொள்ளல் , முற்போக்கு கலை இலக்கியப்பேரவை, கொழும்பு.
6. கிருஷ்ணமூர்த்தி.வெ, (1998), பின் நவீனத்துவத்தின் அடிப்படைக்கூறுகள் முதலிய கட்டுரைகள்,ஆய்வு வட்ட வெளியீடு, கோடம்பாக்கம், சென்னை.
7. கிருஷ்ணராஜா.சோ, (1999), பின் நவீனத்துவம் ஓர் அறிமுகம், மெய்யியல் சங்கம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.
8. கேசவன்.கோ,சிவசேகரம்.சி, முருகையன்.இ, வேணுகோபால்.என், (2008), பின் நவீனத்துவம்: மாயைகளைக்கட்டவிழ்த்தல், தேசிய கலை இலக்கிப்பேரவை.
9. தமிழவன், (1998) , அமைப்பியலிலிருந்து பின் நவீனத்துவம் வரை, தமிழியல் துறை, திருநெல்வேணி.
10. பிரேம், (2008), பின் நவீனத்துவம்: மிகச்சுருக்கமான அறிமுகம், அடையாளம், புத்தானந்தம், இந்தியா.
11. மார்க்ஸ்.அ, (1996), பின் நவீனத்துவம்: இலக்கியம், அரசியல், விடியல் பதிப்பகம், கோவை.
12. முத்து மோகன்.ந, (2007), மார்க்ஸியக்கட்டுரைகள், காவ்யா, கோடம்பாக்கம், சென்னை.